1971 ஜூலை 1]

திரு. கே. ஏ. வகாப் : அரசு தனியாக கைவினை விற்பனைப் பொருள்கள் கூடம் நடத்துவதால் கூட்டுறவுத் துறையில் நடத்தப் பெறும் இந்த விற்பனை நிலையம் நஷ்டத்தில் நடக்கிறது என்பதை அரசு அறியுமா? இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவுத் துறையில் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழக அரசைப் பொறுத்த வரை மாநில அளவில் இது ஒன்றைத் தவிர வேறு அமைப்பு கிடையாது. மாவட்ட அளவில் டிப்பார்ட்மெண்டல் எம்போரியம் வைத்திருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற பொருள்களை விற்பதில் தலைமைச் சங்கம் ஈடுபட்டு செயல்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். கனம் அங்கத்தினர் சொன்னதுபோல் இதிலுள்ள சிரமங்களைப் பரிசீலித்து ஹாண்டிகிராப்ட்ஸ் பொறுத்த அளவில் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் என்ன மாற்று முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று ஆராய்ந்து வருகிறது.

திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*103 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள சேல்ஸ் சொசைட்டி எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?

(இ) 15—6—1967-ம் தேதி வரை இந்த சொசைட்டி எத்தனை முறைகள் தணிக்கையும் சோதனையும் (Audit and Inspection) செய்யப்பட்டுள்ளது?

(உ) இந்தச் சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1921-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

(இ) தொடங்கப்பட்ட நாள் முதல் 15—6—1967 வரை இக்கழகம் 46 முறை தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கழகத்தைப் பார்வையிடும் பணி குறித்த காலத்திற்கு ஒரு முறை செய்யப்பட்டதா என்று தெரியவில்லை.

(உ) ஆம்.

திரு. சு. துரைசாமி : தலைவாவர்களே, மேற்படி கூட்டுறவுச் சங்கத்திலே ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் வரையில் பொது மக்களின் பணத்தை எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பணம் இதுவரையில் வசூல் செய்யப்படவில்லையே. அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, அதற்கு முன்னல் இருந்த நிர்வாகிகள் பொறுப்பு என்று கண்டுபிடிக்கப் பட்டு, இப்போது ஏறத்தாழ ரூ. 15,000 வரையில் வசூலாகி இருக்கிறது. பழைய தலைவரின் சொத்துக்களின் மேல் நடவடிக்கை எடுத்ததில் இவ்வளவு தொகை வசூலாகி இருக்கிறது. மேலும் கிரிமினல் நடவடிக்கைகள் பினல் கோடு 403, 406 பிரிவின் கீழ் எடுக்கப்பட்டு, இப்போது பல்லடம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு நடைபெறுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இதே மாதிரி கடைய நல்லூரிலே உள்ள கூட்டுறவு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை. இது திருப்பூரைப் பற்றிய கேள்வி.

திரு. கே. ரங்கநாதன் : கடந்த பத்து ஆண்டுக் காலமாக கோவையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை. திருப்பூரைப் பற்றித்தான் கேட்கவேண்டும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள அதிகாரிகள் சரிவர வேலை செய்யவில்லை என்பதால் இப்போது புதிய அதிகாரிகள் போட்டு இருக்கிருர்கள். தனி அதிகாரி போட்டதற்குப் பின்னரும் அந்த ரூ. 2 லட்சம் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. அதைத் துரிதப்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன

Building for Tamil Nadu Co-operative Union

* 104 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Registrar of Co-operative Societies has written a letter to the Tamil Nadu Co-operative Union on or about May 1963 pointing out several irregularities in the matter of the construction of the building of the Tamil Nadu Co-operative Union; and

(b) if so, the action taken by the Registrar against those responsible for the mismanagement?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) கூட்டுறவுச்சங்கப் பதிவாளரால் சுட்டிக்காட்டப்பட்ட மறுப்புரைகளில் ஒன்றைத்தவிர மற்றவை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட்டது. நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படை யிலும், அந்தக் குற்றச்சாட்டுகளைப் பற்றி நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.